ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/84 - 2022 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2022.04.01

*2273/84 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*காணி அமைச்சின் கோவை இல.: 4-3/05/2018/HA/454.*
*பிரதேச செயலாளர் கோவை இல.: பென்/2/7/3/29.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக் கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 02 ஏ - வராஹேன கிராம அலுவலர் பிரிவில், வராஹேன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.12.31 ஆந் திகதிய, இல. கா. 4617 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட 0.7141 ஹெக்டயார் (01 ஏக், 03 றூட், 2.3 பேர்ச்) மொத்த விஸ்தீரணத்தில் பின்வரும் விபரத்தைக் கொண்ட பண்டாரவத்தை, லுணுகெரேவ மற்றும் வராஹேன வத்தை அல்லது மஹபண்டார வத்தை எனும் காணித்துண்டின் விபரங்கள் :

*01.* **துண்டு இல. 01**

காணியின் பெயர் : பண்டாரவத்தை, லுணுகெரெவ மற்றும் வராஹேன வத்தை அல்லது மஹபண்டாரவத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்களும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: மங்கலிகா அமரசிங்ஹ, இல. 03, பொலிஸ் வீதி இடம், கொழும்பு - 05, லக்ஷ்மி ஷிரந்தனி அபயகோன் மற்றும் சிலர், இல. 306/2, அலகுகள் 04, 06 ஆவது மாடி, கோட்டை வீதி, நுகேகொட.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பெந்தோட்டை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பந்துல பிரதிராஜ் அபேசேகர,
பிரதேச செயலாளர்,
பெந்தோட்டை.

பிரதேச செயலகம்,
பெந்தோட்டை,
*2022, மாச்சு 29.*

EOG *04 - 0006*